வது என்று அந்தக் கல்லூரித் துறைத் தலைவர்கள் முடிவு செயதுள்ளனர். அதையொட்டி இந்த ஆண்டு மாணவர்கள் தேர்வு செய்வதை கல்லூரி முதல்வரும் தன்னிச்சையாக நிறுத்தியுள்ளார். இந்தப் பகுதி நேர பட்டப்படிப்பு என்பது மிகவும் அவசியமாக, தேவையானதாக இருக்கிறது. படிக்கமுடியாதவர்கள் வேலை செய்துகொண்டே பட்டப்படிப்பை தொடர்வதற்காக இதைப் பயன்படுத்துகிறார்கள். பட்டப் படிப்பு நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து இந்த வட்டாரம் முழுவதும் பல்வேறு மக்கள் பகுதியினர் பாய்லர் ஆலைத் தொழிலாளிகள் அமைப்புகள், அரசியல் கட்சிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்து பல இயக்கங்கங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே எக்காரணம் கொண்டும் பகுதி நேர பட்டப் படிப்பை நிறுத்தக் கூடாது. இதற்கு கல்லூரி போர்டு அனுமதியை, சேர்மன் என்ற முறையில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளிக்காமல் அந்த பகுதிநேர பி.இ. பட்டப்படிப்பை நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-10 மணி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே உள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி ஒரு தனி அமைப்பாக இயங்கி வருகிறது. சில சிறப்புக் கூறுகள் அந்தக் கல்லூரியிலே அமையவேண்டும் என்னும் நோக்குடன் மத்திய அரசினுடைய சார்பிலே உள்ள பிரதிநிதிகளும் மாநில அரசின் சார்பிலே உள்ளவர்களுமாக அமைந்த ஆட்சிக் குழு மூலம் நீண்ட காலமாக அப்படி ஒரு நோக்கத்தோடு இயங்கி வருவது. எனினும் அவர்களுக்குச் சில இடையூறுகள் இருக்கின்றன, இந்த பார்ட்-டைம் வகுப்பு நடத்துவதில். இருந்தாலும் அடுத்த பத்து நாட்களில் நடைபெறக் கூடிய அந்த வட்டாரப் பொறியியல் கல்லூரியினுடைய ஆட்சிக்குழு இந்தப் பிரச்சினை குறித்து விரிவாக ஆலோசித்து தகுந்த முடிவு எடுக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

(இ) நாகப்பட்டிணத்திலிருந்து படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சிலர் இலங்கைக்குக் கொண்டு போகப்பட்டுள்ளதால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் குறித்து.

திரு. கோ. வீரையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாகையின் அருகில் உள்ள அக்கரைப் பேட்டை, கீத்தாங்குப்பம், கல்லலாறு பகுதியைச் சார்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோது 65 மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்ட விவரங்களை இங்கே எழுப்பியபோது முதலமைச்சர் அவர்கள் துரிதமாக அதிலே கவனித்து கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த முறையிலே அரசு துறையிலே துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 58 படகுகள் கிடைத்திருப்பதாகவும் அதிலே 311 பேர்கள் இருப்பதாகவும்

1990 மார்ச் 30] [திரு. கோ. வீரையன்]

அவர்கள் இலங்கைப் பகுதியிலே பிடித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாகவும் அரசு செய்திக் குறிப்பு மூலமாக நேற்று இரவே அறிவித்திருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே அந்த மீனவ மக்களின் சார்பிலே தெரிவித்துக் கொள்வதோடு அந்த 311 பேர்களும் பாதுகாப்பாக இருக்கிறார்களா? அவர்கள் இங்கே கொண்டு வரப்படுவார்களா? அதற்கு என்ன முயற்சிகளை முதல்வர் அவர்கள் அல்லது இந்த அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது' அதற்கு அவர்கள் மேற்கொண்டு எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய முயற்சிகள், எப்போது அவர்கள் இங்கே திருப்பிக் கொண்டு வரப்படுவார்கள் என்ற செய்தியையும் உங்கள் மூலமாக முதல்வர் அவர்களிடமிருந்து நான் அறியவிரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாகைக்குப் பக்கத்திலே மீன் பிடிப்பதற்காக சென்ற மீனவர்களுடைய 65 படகுகள் கடத்தப்பட்டதாகவும் அதிலே 7, 8 படகுகள் திரும்பி வந்ததாகவும், திரும்பி வந்தவர்கள் தெரிவித்த தகவல்கள் எது எது என்பது குறித்தும் நேற்றைய தினம் நம்முடைய நண்பர் வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதில் அளித்ததோடு உடனடியாக இலங்கையில் உள்ள இந்திய தூதரோடு நம்முடைய அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் தொடர்பு கொண்டு பேசினார். அவர் எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக நேற்று மாலையிலே வந்த செய்தியின்படி கடத்தப்பட்ட படகுகள் இலங்கைப் பகுதியிலே உள்ள கடல் ஓரத்திலே இருப்பதாகவும், ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் எந்தவித மான பாதகமும் இன்றி அவர்கள் சுகமாக இருப்பதாகவும் செய்தி கிடைத்தது.

இன்னும் அவர்கள் திருப்பி அனுப்பப்படவில்லை என்ற காரணத்தால் இன்று காலையிலே நானும் கொழும்புடன் தொடர்பு கொண்டேன். இங்கே வருவதற்குத் தாமதம் ஆன காரணமே கூட அதுதான். அங்கே தொடர்பு கொண்டு பேசியதில் உடனடியாக அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் சிங்கள அரசு ஈடுபட்டிருப்பதாக எனக்குத் தகவல் தரப்பட்டது. இன்று அல்லது நாளை அவர்கள் திரும்பி வருவதற்கான முயற்சிகள் மேற்கொண்டு இருப்பதாகவும் நிச்சயம் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் உறுதி வழங்கப்பட்டிருக்கிறது. இது குறித்து நான் டெல்லிக்கும் தகவல் அனுப்பியிருக்கிறேன், அரசின் சார்பில். இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணம் மீன் பிடிப்பதற்கு ஒதுக்கப்பட்ட எல்லைப் பகுதியை நம்முடைய மீனவர்கள் கடந்துவிட்டது தான் என்று சொல்லப்படுகிறது. அது எந்த அளவு உண்மை என்று இன்னும் தெளிவாக்கப்படவில்லை. ஏற்கெனவே ஆந்திரப் பகுதியிலே கூட எல்லைப் பகுதியைக் கடந்த நமது மீனவர்கள் ஆந்திரத்திலே உள்ள மீனவர்களால் பிடித்து வைக்கப்பட்டு, இந்த அரசு முயற்சித்து அவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். அது போன்ற நிலையா அல்லது வேறு பிரச்சினையா என்கிற விவரங்கள்

இப்போது இல்லை என்றாலும் கூட அவர்கள் பத்திரமாக திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற உறுதி மொழி கிடைத்திருக்கிற காரணத்தால் ஆறுதலாக இருக்கலாம் என்ற நம்பிக்கையைத் தெரிவிக்கிறேன்.

10-15 மணி

திரு. குமரி அனந்தன் ; பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்ததற்குப் பாராட்டு, கடத்தப்பட்டது என்று சொன்னார்களே யாரால் கடத்தப்பட்டது' இலங்கை இராணுவத்தாலா அல்லது வேறு யாரால் கடத்தப்பட்டது என்ற தகவல்-புலிகளால் கடத்தப்பட்டதா அல்லது வேறு போராளிக் குழுக்களால் கடத்தப்பட்டதா என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; என்னுடைய விளக்கத்திலேயே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன், அந்த விவரங்கள் கிடைக்கவில்லையென்று. ஒரு வரையறைக்குட்பட்ட இடத்திலேயிருந்து— இதுவரையிலே மீன் பிடிக்கலாம் என்று எல்லைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லைகள் தாண்டப்படுகிற நேரத்தில் இதுபோன்ற பிரச்சினைகள்— இலங்கையில் மாத்திரமல்ல; நம்முடைய இந்தியத் திருநாட்டிலேயே ஆந்திரப் பகுதியில் பல நேரங்களிலே ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லையைக் கடந்து ஆந்திரப் பகுதிக்குச் சென்றுவிடுகிற நேரத்தில் ஆந்திராவிலே உள்ள மீனவர்கள் நம்முடைய மீனவர்களைப் பிடித்து வைத்து அவர்களை விடுவிக்க நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிக நன்றாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். எனவே, அரசு கடத்தியதா அல்லது அரசாங்க இராணுவ வீரர்கள் கடத்தினார்களா அல்லது போராளிகள் கடத்தினார்களா அல்லது அங்குள்ள மீனவர்கள் தங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சம்பவங்களுக்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சியா என்கின்ற விவரங்கள் இன்னும் தெரியவில்லை. எப்படி இருந்தாலும் கூட, நம்முடைய மீனவர்களைக் காப்பாற்றுகின்ற முயற்சியிலே அரசு விரைந்து ஈடுபட்டிருக்கிறது. அவர்களை உடனடியாக இங்கே அனுப்பி வைக்கின்ற முயற்சியிலே சிங்கள அரசும் ஈடுபட்டு இருக்கின்றது. இதற்கான முயற்சியிலே இலங்கையிலே இருக்கிற இந்தியத் தூதுவர் மிக முனைப்பாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்.

(ஈ) இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தினருக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொள்ளாதது குறித்து.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரத்தில் பணி முடித்து, தாயகம் திரும்பிய, இலங்கைப் போராளிகளிடமிருந்து மீண்டு வந்த இந்திய இராணுவத்தினருக்கு தமிழகத்திலே அளிக்கப்பட்ட வரவேற்பிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,